செ.வெ.எண் : 37 /ஆகஸ்ட் நாள் : 18.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக, விளையாட்டு பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான மாநில அளவிலான ஹாக்கி போட்டியினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் இன்று (18.08.2017) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், விளையாட்டு பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான மாநில அளவிலான ஹாக்கி போட்டியினைத் துவக்கி வைத்து போட்டியில் கலந்து கொண்டுள்ள விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக 2017-2018ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான விளையாட்டு பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான ஹாக்கி போட்டிகள் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் இன்று (18.08.2017) முதல் 22.08.2017 வரையிலான 5 நாட்களில் நடைபெறுகின்றது. இப்போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்போட்டிகளில் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, அரியலூர், திருச்சி, புதுக்கோட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதியின் அணிகள் கலந்து கொண்டுள்ளனர். இப்போட்டியில் வெற்றி பெறும் அணியானது மாநில அளவில் நடைபெறவுள்ள குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெறும் அணியாகும்.

விளையாட்டுப் போட்டியினைத் துவக்கி வைத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு மாவட்ட விளையாட்டு விடுதிகளைச் சேர்ந்த அணிகளின் வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு விளையாட்டுப் போட்டியில் தங்களது முழுத் திறனை நேர்மையான விளையாட்டு மாண்புடன் (Sportsmanship) வெளிப்படுத்தி வெற்றி பெற வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர் திரு.பா.பிராங்பால் ஜெயசீலன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை உள்பட அணிகளின் பயிற்றுநர்கள், விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**